05.03.2025 OS.No. 124/2018
பி.வா.சா. 2 பெயர்: கிருஷ்ணன் த/பெ. சென்ராயன்
சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

2. வாதி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் தாவா சொத்தினை நாங்கள் பிரித்துக்கொண்டோமா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பட்டா எனது பெயரிலும், தலைகொண்டான், சென்னன், பிரபாகரன் , மதுப்பிரியா ஆகியோர் பெயரில் கூட்டாக பட்டா இருந்தது. அதை வைத்து வழக்கு தாக்கல் செய்த பின்னர் நானும் , தலைகொண்டான் மனைவி பாதுமணி, சென்னன், பிரபாகரன் , மதுப்பிரியா ஆகியோர்கள் சேர்ந்து .தாவா சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டோம். எனக்கு உடன்பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால் 3 பேர்கள். கௌரி , லட்சுமி மற்றும் முருகம்மாள் . மேற்படி உடன்பிறந்த சகோதரிகளுக்கு தாவா சொத்தில் பாகம் கொடுத்துள்ளோமா என்றால் கொடுக்கவில்லை அது பற்றி அவர்கள் கேட்கவில்லை. 30 ஆண்டுகளாக பட்டா எங்கள் பெயரில் கூட்டாக இருந்தது. நான் கிராம நிர்வாக அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்தேன் என்றும் அதை வைத்து தாவா சொத்தை பொறுத்து பட்டாவை எங்கள் பெயரில் மாற்றி கொண்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சில காலம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வரும் நபர்களுக்கு மனு எழுதி கொடுத்து இருந்தேன். தற்போது அந்த வேலை செய்யவில்லை அதற்கும் பட்டா எங்கள் பெயரில் உள்ளதற்கும் சம்மந்தம் இல்லை. பட்டா எண். என்னவென்றால் பழைய பட்டா எண் 143 தற்போது தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டதால் பட்டா எண் 533 என்பது பாதுமணி பெயரில் உள்ளது. மற்றவர்களுக்கு தனிதனி பட்டா வழங்கப்பட்டுள்ளது. பட்டா எண் 534 யார் பெயரில் உள்ளது என்றால் சென்னன் பெயரில் உள்ளது. பட்டா எண் 534 சென்னன் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. பட்டா எண் 533 பாதுமணி பெயரில் இல்லை என்றால் சரியல்ல. பட்டா எண் 143 யார் பெயரில் இருந்தது என்றால் என் தாயார் செல்லியம்மாள் பெயரில் இருந்தது.

3. மேற்படி பட்டா எண் 143 ஐ செல்லியம்மாள் இறந்த பின்னர் நாங்களாகவே பட்டா மாற்றம் வாதி மற்றும் எனது பிற சகோதரிகளுக்கு தெரியாமல் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. நான் பட்டா மாற்றம் பற்றி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பி தெரியப்படுத்தியுள்ளேனா என்றால் இல்லை. மாதுப்பிரியா என்பவர் யார் என்றால் தலைக்கொண்டான் என்பவரின் மகள் . அவர் எங்கே வேலை செய்கிறார் என்றால் சேலம் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிகிறார். பிரபாகரன் என்ன வேலை செய்கிறார் என்றால் ஆசிரியர் வேலை செய்கிறார். மாதுப்பிரியா, பிரபாகரனுக்கு சொத்து

எழுதிகொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவர்களுக்கு உரிய பாகத்தை பாதுமணிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பாக ஆவணமானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை பொறுத்து நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை முறைகேடானது என்றும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை , தாயார் இறப்பு மற்றும் வாரிசு சான்று உள்ளதா என்றால் மேற்படி ஆவணம் இருந்தது தற்போது மேற்படி ஆவணம் வீடு கட்டும்போது காணாமல் போய்விட்டது. பாகப்பிரிவினை செய்தபோது வாரிசு சான்றிதழ் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது தாய் தந்தை இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை கொடுக்காமல் முறைகேடாக பாகப்பிரிவினை ஆவணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் தவிர வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் நான் விற்பனை செய்யவில்லை. மற்றவர்கள் விற்றுள்ளார்களா என்று எனக்கு தெரியாது.

4. எனது குடும்ப அட்டை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் பாதுமணி , கிருஷ்ணன், பிரபாகரன், சுகண்யா ஆகியோர் பெயர்கள் உள்ளது. எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். நான் யாரையும் தத்து குழந்தையாக வளர்க்கவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் குழந்தைகள் பிரபாகரன், மதுப்பிரியா ஆகியோர்களை நான்தான் வளர்த்து வருகிறேன். எனது அண்ணன் மகன் பிரபாகரனுக்கு நான் வீட்டை கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பாதுமணி தான் கிரயம் கொடுத்துள்ளார் . அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். பாதுமணிக்கு நான் நிலத்தைதான் கிரய ஆவணம் கொடுத்துள்ளேன் என்றும் வீட்டை கிரயம் கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் கிரய ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை . எனது குடும்பத்தின் மூத்த சகோதரி கௌரி என்பவருக்கு வீடு மற்றும் நிலத்தில் உரிய பாகம் கொடுக்காமல் நாங்களாகவே வீடு மற்றும் நிலத்தை மோசடியாக பாகம் பிரித்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. வாரிசுகள் அனைவரையும் சேர்க்காமல் நாங்கள் மட்டுமே எழுதிகொண்டுள்ள பாக ஆவணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பாக ஆவணம் ஏற்பட்ட போது எனது சகோதரிகள் உயிரோடு இருந்தார்கள் என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்த பின்னர் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யவில்லை. வீடு சம்பந்தமாக கௌரி மற்றும் 2 நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு விசாரணை முடிந்துவிட்டதா என்றால் விசாரணை முடிந்து எனக்கு சாதகமாக தீர்ப்பு ஆகியுள்ளது. மேற்படி வழக்கு தீர்ப்பு ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5.அ.வ எண்.187/2019 இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. லட்சுமி, முருகம்மாள், கௌரி, சென்னன் நால்வரும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அதில் நான் தரப்பினர் அல்ல. எனது தாயார் சொத்தில் வாதிக்கு சமபாக உரிமை உள்ளது என்றும் அதை நான் கொடுக்கவில்லை என்பதால் வாதி எனக்கு பல முறை அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், வருவாய்துறையில் பட்டா சம்பந்தமாக மனு அளித்துள்ளார் என்றும், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய ஆட்சேபணை கொடுத்துள்ளார் என்றால் அது சம்பந்தமாக மனு கொடுத்து விசாரணை செய்தார்கள். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு சொல்லிவிட்டார்கள். தாவா இடத்தை செங்கல் சூலை அமைக்க கொடுத்துள்ளேன் என்றால் சில நாள் ஆறுமுகம் என்பவர் செங்கல் சூலை நடத்தி வந்தார் . பிரச்சனை காரணமாக காலி செய்துவிட்டார். தற்போது காலி இடமாக தான் உள்ளது.

6. தாவா இடத்தில் இருந்த பழைய வீட்டினை இடித்துவிட்டேன் என்றும், விவசாய நிலத்தை அழித்துவிட்டேன் என்றும் சொன்னால் பழைய வீடு சேதமடைந்து இருந்ததால் அதை இடித்துவிட்டு அதில் பாதுமணி வீடு கட்டியுள்ளார். விவசாய நிலம் எதுவும் இல்லை பாறை, மேடு இடமாகதான் உள்ளது. வா.சா. ஆ.10 புகைப்படமானது தாவா சொத்தின் புகைப்படம் என்றால் சரிதான். தாவா சொத்து வாதிக்கு 1/6 பாகம் உள்ளது என்றும் அதை நான் கொடுக்க கடமை பட்டவர் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை.

ஓம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.